# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8069020

1. District மாவட்டம் : திருச்சி    PS: காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு    Year ஆண்டு: 2023    FIR No. மு.த.அ. எண்: 12    Date நாள்: 30.08.2023

2. (i) Act சட்டம்: Prevention of Corruption    Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act 1988 (as amended 2018)    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 23.08.2023 ^ 29.08.2023    Date to : நாள் வரை 11.30 hrs.
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை 12.15 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.08.2023    Time நேரம் : 07.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    எழுத்து மூலம் (கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்    சுமார் 65 km வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி    மாராடி கிராம நிர்வாக அலுவலகம், துறையூர் (TK), திருச்சி Dt.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —    District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : அ. சித்ரா    (b) ~~Father's/~~Husband's Name : தந்தை / கணவர் பெயர் : அன்பழகன் கார்த்தி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 07.05.1996    (d) Nationality : நாட்டினம்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் : —    Place of Issue : வழங்கப்பட்ட இடம் : —
   (f) Occupation : தொழில் : விவசாய கூலி    (g) Address : முகவரி : நெ. 4/314, ... , மாராடி கிராமம், துறையூர் (TK), திருச்சி (D.T)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tmt. சிந்து, கிராம நிர்வாக அலுவலர், மாராடி கிராமம், துறையூர் (T.K), திருச்சி (Dt)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   — தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் ரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

30.08.2023

Name: பெயர் A. பிரசன்னா வெங்கடேஷ்
Rank: நிலை காவல் ஆய்வாளர், [illegible] [illegible] மற்றும் [illegible] பிரிவு, திருச்சி.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2023–ன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி..

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 30.08.2023 பணியில் இருந்த போது காலை 07.00 மணியளவில் திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், மாராடி கிராமம் புதுகாலனியை சேர்ந்த அஸ்வின்காந்தி அவர்களின் மனைவி திருமதி.சத்யா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், மாராடி கிராமம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் திருமதி.சுமதி மற்றும் புகார்தாரர் திருமதி.சத்யா ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டு, இன்று 30.08.2023 காலை 08.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.12/2023 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். அப்புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புதல் அ.சத்யா, க/பெ.அஸ்வின்காந்த், நெ.4/347, புது காலனி, மாராடி கிராமம், துறையூர் வட்டம், திருச்சி மாவட்டம். பெறுதல் உயர்திரு. காவல்துறை ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சி மாவட்டம். மரியாதைக்குரிய அய்யா, நான் துறையூர் வட்டம், மாராடி புது காலனியில் எனது குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். நான் பத்தாவது வரை படித்துள்ளேன். எனது கணவர் அஸ்வின்காந்த் காரைகாலில் டாட்டு ஸ்டுடியோ வைத்து தொழில் செய்து வருகிறார். எங்களுக்கு ஒரு மகன் மற்றும் இரண்டு மகள்கள் உள்ளனர். எனக்கு உடன் பிறந்த அண்ணன் ஒருவர் உள்ளார். கடந்த 1995ஆம் ஆண்டு துறையூர் ஆதிதிராவிடர் தனிவட்டாட்சியர் ந.க.அ 1001/92, நாள். 15.5.95 படி எங்கள் அப்பா பொய்யாமணி பெயரில் துறையூர் வட்டம் மாராடி கிராம புல எண்.91/1ல் உள்ள 2 1/2 செண்ட் நிலத்தை வீடு கட்டுவதற்கு இலவச வீட்டு மனை ஒப்படை மூலம் கொடுத்தார்கள். என் அப்பா 1998 ஆண்டு இறந்து விட்டார். என் அண்ணன் சக்திவேலுக்கு என் அப்பா குடியிருந்து வந்த கூரை வீட்டினை கொடுத்துவிட்டார்கள். என் அப்பாவிற்கு கொடுத்த வீட்டு மனையில் நாங்கள் 2016 ஆண்டு வீடு கட்டி குடியிருந்து வருகிறோம். என் அம்மா என்னுடன் வசித்து வருகிறார். என் அண்ணனும் என் அம்மா கண்ணம்மாவும் என் அப்பா பொய்யாமணி பெயரில் கொடுத்த இலவச வீட்டுமனைக்கான பட்டாவை என் பெயருக்கு மாற்ற 2019 ஆண்டு சம்மதம் கடிதம் கொடுத்துள்ளார்கள். எங்கள் புது காலனியில் சுமார் 300 வீடுகள் உள்ளது. பட்டாவிற்கு கணக்கு எடுக்க வந்த போது அப்பா பெயரில் உள்ள இலவச வீட்டுமனையில் நான்தான் வீடு கட்டி அதில் குடியிருந்து வருவதாக கூறினேன். ஆகவே பட்டாவிற்கான லிஸ்டில்

எனது பெயரை சேர்ந்து. லிஸ்டு எடுத்து சென்றார்கள். புது காலனியில் உள்ள என்னையும் சேர்த்து மொத்தம் 138 பேருக்கு பட்டா வந்துள்ளதாகவும், 22.8.23 தேதி பச்சமலையில் வைத்து திருச்சி கலெக்டர் வந்து தருவதாகவும் கூறினார்கள். நான் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அன்று பச்சமலைக்கு சென்று திருச்சி கலெக்டரிடம் பட்டா வாங்க முடியவில்லை. பட்டா வாங்க வராதவர்களுக்கு உள்ள பட்டா வீ.ஏ.ஓ விடம் உள்ளதாகவும், வீ.ஏ.ஓவிடம் வாங்கி கொள்ளும்படியும் 22.8.23 தேதி பட்டா வாங்க சென்றவர்கள் என்னிடம் கூறியதால் 23.8.23 தேதி சுமார் 11.30 மணிக்கு மாராடி கிராம வீ.ஏ.ஓ சுமதியை அவரது அலுவலகத்தில் பார்த்து என் பெயருக்கு வந்துள்ள இலவச மனை பட்டாவை கொடுக்குமாறு கேட்டேன். அதற்கு அவர் நீ பாட்டுக்கு பட்டா வாங்க வராம இருந்துட்ட, வாங்காதவங்க பட்டாவெல்லாம் தாலுக்கா ஆபீசுக்கு போயிடுச்சி, அங்க போய் வாங்கிட்டு வரணும்னா என்னிடம் பத்தாயிரம் கொடுத்தா உன் பெயருக்கு வந்துள்ள இலவச மனை பட்டாவை வாங்கித்தருவதாக கூறினார். அதற்கு நான் என்ன மேடம், கலெக்டர்கிட்ட வாங்கினவங்க எல்லாம் பணம் இல்லாமத்தானே வாங்கி இருக்காங்க என்றேன். அதற்கு அவர், கலெக்டர் கொடுக்கும்போதே நீ வாங்கியிருக்க வேண்டியதுதானே, பத்தாயிரம் கொடுத்தா பட்டா வாங்கித் தர்றேன், இல்லன்னா முடியாது என்று சொல்லிவிட்டார். அதற்கு நான் அவரிடம், சரிங்க மேடம் என் வீட்டுக்காரர்கிட்ட கேட்டுட்டு வந்து உங்களை பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். இந்த விஷயத்தை எனது கணவரிடம் சொன்னதற்கு, பணம் கொடுக்க வேண்டாம். இலவச வீட்டுமனைதானே பணம் கொடுக்காமல் கேட்டுப்பார் என்று சொல்லிவிட்டார். அதன்பிறகு நான் 29.8.23ம் தேதி மதியம் சுமார் 12.15 மணிக்கு வீ.ஏ.ஓ அலுவலகத்திற்கு போய் அங்கிருந்த வீ.ஏ.ஓ. சுமதியிடம், நீங்க கேட்ட பத்தாயிரத்தை என்னால் புரட்ட முடியாது மேடம், ஆகவே பணம் இல்லாமல் எனக்கு வந்துள்ள இலவச மனை பட்டாவை தாருங்கள் என்று கேட்டேன். அதற்கு வீ.ஏ.ஓ சுமதி உனக்கு பத்தாயிரம் கொடுக்க முடியலன்னா மூவாயிரம் கொறச்சி ஏழாயிரமாவது நாளைக்கு கொண்டு வந்து கொடு, அப்போதுதான் உனக்கு பட்டாவை வாங்கித்தர முடியும் என்று கறாராக சொல்லிவிட்டார். அவர் கேட்ட ஏழாயிரம் லஞ்சம் பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை, இருந்தாலும் நான் வேறு வழியில்லாமல் அப்போதைக்கு அவரிடம் சரிங்க மேடம் நாளைக்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். வீ.ஏ.ஓ சுமதி ஏழாயிரம் லஞ்சம் கேட்ட விசயத்தை எனது கணவருக்கு தெரிவித்தேன். அவர் லஞ்சம் கொடுக்க வேண்டாம், இது சம்மந்தமாக லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார்கொடுத்து நடவடிக்கை எடு என்று கூறினார். என்னிடம் லஞ்சம் கேட்ட மாராடி வீ.ஏ.ஓ சுமதி கேட்ட ஏழாயிரம் பணத்தை தயார் செய்து கொண்டு இன்று வந்து புகார் கொடுக்கிறேன். மாராடி வி.ஏ.ஓ. சுமதி மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (அ.சத்யா) 30.8.2023

Submitted to the Court of Hon,ble Special Judge, Special court for the Prevention of

Corruption Act-1988, Trichy. Received this report at 07.00 hrs on 30.08.2023 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.12/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act-1988 (as amended in 2018) at 08.00 hrs on 30.08.2023. Sd.xxx (A.PRASANNAVENKATESH) 30/8/2023 Inspector of Police, V&AC, Trichy.

30/8/23